DEPOSITION OF WITNESS
(Chapter XX Code of Criminal Procedure)
IN THE COURT OF THE III ADDITIONAL DISTRICT JUDGE, SALEM.

**அமர்வு வழக்கு எண்.302/2015**

Deposition of :PW -22

| | | |
|---|---|---|
| Name | : சாந்தா | Caste: |
| Father's / Husband Name: | | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |
| Date | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Law and recording the Deposition of the Witness on 30th day of January 2025.

A1 and A3 to A6 present.

**முதல் விசாரணை**

நான் சின்னதிருப்பதியில் குடியிருக்கிறேன் வீட்டு குடித்தனமாகத்தான் இருக்கிறேன். இறந்துபோன விஜயன் எனக்கு தெரியும். அவர் எனக்கு உறவினர். ஆஜர் எதிரிகளில் எதிரி அருண்குமாரை ஒருநாள் காவல்நிலையத்தில் பார்த்துள்ளேன். 1வது எதிரி சுந்தரமூர்த்தி எனது உடன்பிறந்த தம்பி. எனது அம்மாவிற்கு சொந்த ஊர் அரியானூர் . என்னை அனுமந்ததீர்த்தம் என்றஊரில் உள்ள நபரை திருமணம் செய்து கொடுத்தார். எனது கணவர் இறந்துவிட்டார். அவருடைய 5 ஏக்கர் நிலத்தை எனக்கு தானம் கொடுத்துவிட்டார்கள். அந்த நிலம் சீரகாப்பட்டியில் உள்ளது.

அந்த நிலத்தை நான் விநாயாகமிஷன் சண்முகத்திற்கு கிரயம் கொடுத்துவிட்டேன். கொலை பற்றி தெரியுமா என்று போலிசார் காவல்நிலையத்திற்கு அழைத்து என்னை கேட்டார்கள். அப்போது அங்கு எதிரி அருண்குமார் மட்டும் இருந்தார். நான் எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னேன். வழக்கு சம்மந்தமாக எனக்கு வேறு எதுவும் தெரியாது.

(சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி கு.வி.செய்ய அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொணடதற்கிணங்க அனுமதி வழங்கப்பட்டது)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

எனது தம்பி 1வது எதிரி சீராகப்பாடியில் எனக்கு எழுதிக்கொடுக்கப்பட்ட சொத்தை விலைக்கு கேட்டார் என்று சொன்னால் ஆமாம். 1வது எதிரி நிலத்திற்கு பணத்தை கொடுக்காததால் நான் பஞ்சாயத்து செய்து நிலத்தை விநாயகாமிஷன் சண்முகத்திற்கு விற்பனை செய்துவிட்டததால் எனக்கும் 1வது எதிரிக்கும் பேச்சு வார்த்தை இல்லை என்று சொன்னால் சரிதான். அதன் காரணமாக நான் எனது பெற்றோர் சொத்தில் 1/3 பாகத்தை விஜயனுக்கு நான் எழுதிக்கொடுத்தேன் என்றும், அதனால் விஜயனுக்கும், என் தம்பி 1வது எதிரிக்கும் பகை ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நான் சொத்து எழுதிக்கொடுக்கவில்லை. சாட்சி கையெழுத்து போடும்படி விஜயன் கேட்டார். நான் போட்டுகொடுத்தேன். அவர் என்ன ஆவணம் எழுதினார் என்பது எனக்கு தெரியாது.

விஜயன் பெயரில் சொத்து கிரயம் ஆனதால் எனது பெயரிலும், விஜயன் பெயரிலும் 1வது எதிரி ஒரு நிலஅபகரிப்பு வழக்கு கொடுத்தார் என்றால் சரிதான். மேற்படி புகார் கொடுத்ததால் 1வது எதிரிக்கும், விஜயனுக்கும் பகை அதிகமானது என்று நான் போலிசார் விசாரணையில் சொன்னேன் என்று சொன்னால் சரியல்ல. அந்த சூழ்நிலையில் தான் விஜயன் கொலை செய்யப்பட்டார் என்றும், விஜயன் கொலைக்கு பின்பு ஒருவாரம், 10 நாளில் 1வது எதிரி தான் தான் கொலை செய்தேன் என்று சரணடைந்துவிட்டார் என்றும் புலன்விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் கொலை செய்துவிட்டார்கள் என்று கேள்விபட்டேன். ஆனால் யார் செய்தார்கள் என்று தெரியாது என்று தான் போலிசாரிடம் சொன்னேன். நான் மேற்படி உண்மைகளை போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு 1வது எதிரி என் தம்பி என்பதால் அவரை காப்பாற்ற உண்மையை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

**3 முதல் 6 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

காவல் நிலையத்திற்கு விஜயன் இறந்து ஒருமாதத்திற்க்கு மேல் கழித்து போலிசார் என்னை விசாரணைக்கு அழைத்தார்கள். நான் ஒருவாரம் காவல் நிலையத்திற்கு சென்றேன். அந்த ஒரு வாரமும் எதிரி அருண்குமாரை போலிசார் காவல்நிலையத்தில் வைத்திருந்தார்கள்.

**1 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**

மறுவிசாரணை இல்லை.

Sd/- L. Kalaivani,
III Additional District Judge,
Salem.